2010 ஏப்ரல் 8]

ஆர்வம் உள்ள குறைந்தபட்சம் 20—க்கும் குறையாமல் தொழில் முனைவோர்கள் வந்தால், புதியதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் தனியார் தொழிற்பேட்டைக்கு ரூபாய் ஒரு கோடி வரை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக மானியம் வழங்குவதற்கு நம்முடைய முதல்வர் அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும், தனியார் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணத்தில் 50 விழுக்காடு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. கூட்டுறவு முறையிலே தொழிற்பேட்டைகள் அமைக்க 25 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தற்போது இருக்கும் 12 தொழில் கூட்டுறவு தொழிற்பேட்டைகளையும் சேர்த்து, மேலும் ஒரு தொழிற்பேட்டையை காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியிலே அமைக்க அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

பத்திரப் பதிவு அலுவலகம்

***57607—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் விரிவுபடுத்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் பேரூராட்சியில், ஏற்கெனவே சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளதால், இவ்வலுவலக ஆட்சி எல்லைக்குள் மேலும் ஒரு விரிவுபடுத்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு எதுவுமில்லை.

[2010 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கரில் ஏற்கெனவே உள்ள சார் பதிவாளர் அலுவலகம் ஏறத்தாழ 1925 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டு. சுமார் 100 வருடங்களுக்கு மேலாக அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற மேசை, நாற்காலிகள் சரியாக இல்லை. கழிவறைகள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளன. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்கின்ற அதே பதிலை எனக்கும் சொல்லக்கூடாது. அங்கே ஏற்கெனவே சோளிங்கர் தொகுதிக்கு அருள்மிகு யோகநரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் அமைத்துத் தர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். அந்தத் திட்டமும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே மேலும் மேலும் பல திட்டங்களைக் கொண்டு வந்து, அரசின் சார்பாக செயல்படுத்தினால்தான் தொகுதி வளர்ச்சி பெறும். அங்கே ரோப் கார் பயன்படுத்துகின்ற பக்தர்களுக்கும், அதேபோல அங்கே பேருந்துகளிலே பயணிக்கின்ற பயனாளிகளுக்கும், அனைவருக்கும் வசதியாக இருக்கும். அதனால் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு புதிய கட்டடம் கட்டித் தர ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் தமிழகத்தில் இருக்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகங்கள் அதிகமான அளவிற்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தந்து, புதிய கட்டடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

அதேபோன்று, சோளிங்கர் பேரூராட்சியில் இருக்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகம் 100 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாய்ந்த கட்டடம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்

2010 ஏப்ரல் 8]

கூறியிருக்கிறார்கள். எனவே, அங்கு இருக்கக்கூடிய பழுதடைந்த மேசை, நாற்காலிகள் இவற்றைச் சரி செய்து தருகின்ற பணிகளும், அதேபோன்று கட்டடப் பணிகளும் நிச்சயமாக வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதகமான பதிலை எனக்குத் தந்தமைக்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விரைவில் அதற்கான பணியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி தோகைமலையில், சார் பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்பது அப்பகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையாகும். நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், சட்டமன்றத்தில் உரையாற்றும்போதும், நேரிலும் பல முறை வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன். அவர் இந்த நிதியாண்டிலே அவசியம் தோகைமலைக்கு சார் பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தருவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதை அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை கடந்த ஆண்டு என்னிடத்தில் வைத்திருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடத்தில் இந்த மானியக் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்படும்போது நிதியைப் பற்றிப் பேசி நிச்சயமாக நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.